# தூய லூர்து அன்னை ஆலயம்


50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| | | |
|---|---|---|
| **24 ஜூன் 2018** | **திருமுழுக்கு யோவானின் பிறப்பு** | **இரண்டாம் ஆண்டு** |



## உங்கள் சிந்தனைக்கு

அன்பு இறைமக்களே!

இன்று நாம் திருமுழுக்கு யோவானின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். பிறப்பு என்பது வாழ்வின் முக்கிய நிகழ்வுகளுள் ஒன்றாக இருக்கிறது. பிறப்பு தான், ஒருவருக்கு வாழ்வையே கொடுக்கிறது. பிறப்பு மூலமாகத்தான், இந்த உலகத்திற்கு நாம் வருகிறோம், இந்த உலகத்தைப் பார்க்கிறோம். வாழ்வு என்கிற கொடையை நாம் பெற்றுக் கொள்கிறோம். திருச்சபையில் பொதுவாக நாம் புனிதர்களின் இறப்பு விழாவை, அதாவது, அவர்களின் விண்ணகப் பிறப்பு விழாவையே நாம் திருவிழாவாகக் கொண்டாடுகிறோம். ஆண்டவர் இயேசுவுக்கும், அன்னை மரியாவுக்கும் தவிர, திருச்சபை கொண்டாடும் ஒரே பிறப்பு விழா திருமுழுக்கு யோவானுக்கு மட்டும்தான். இதிலிருந்தே அவரது சிறப்பையும், தனித் தன்மையையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

திருமுழுக்கு யோவானின் பிறப்பு சாதாரணமாக நிகழ்ந்தது அல்ல. அது ஒரு அசாதாரணமான நிகழ்ச்சி. வயது முதிர்ந்த ஒரு தம்பதியருக்கு, கடவுளுக்காக தன்னையே அர்ப்பணித்த குரு மரபின் தோன்றலில் உள்ள செக்கரியாவுக்கும், கடவுள் நம்பிக்கை மிகுந்த, அன்னை மரியாளின் உறவினராக இருந்த, எலிசபெத்திற்கும் மகனாகப் பிறந்த திருமுழுக்கு யோவானின் பிறப்பு உண்மையில், ஆச்சரியம் தரக்கூடிய பிறப்புதான். வயிற்றில் இருக்கும்போதே, மெசியாவைக் கண்டு, மெசியாவின் தாயை அடையாளம் கண்டு கொண்ட உன்னதப் பிறப்பு திருமுழுக்கு யோவானுடையது. இயேசுவின் புதுமைகளையும், அடையாளங்களையும் கொண்டே அவரை, மெசியாவாக அடையாளம் காணமுடியாதவர்கள் நடுவில், கருவில் இருக்கும்போதே அடையாளம் கண்டு கொண்டவர் திருமுழுக்கு யோவான்.

இயேசுவை அடையாளம் கண்டுகொண்டு, தனது வாழ்வு முழுவதும் இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும், அடையாளம் காட்டுவதிலும் தன் வாழ்வைச் செலவிட்டவர் திருமுழுக்கு யோவான். அவரைப் போல நாமும், ஏழைகளில், வறியவர்களில் இயேசுவை அடையாளம் காணுவோம். இயேசுவை உலகிற்கு அடையாளப் படுத்துவோம். வாழ்த்துக்கள். ஆசீர்.



## இடைவிடா சகாய அன்னை நவநாள்

சனிக்கிழமைகளில் **இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.





## நற்கருணை ஆராதனை வழிபாடு

**01-07-2018, ஞாயிறு, காலை 11:30 & மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு, அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.





## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**14-07-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.



## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு

**15-07-2018, ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை (பல்நோக்குச் சமூகக் கூடம்)**



முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி, முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

**தொடர்பு: திரு. ரெக்ஸ் (9822-6171)**



## மறைக்கல்வி வகுப்புகள் ஆரம்பம்

விடுமுறைக்குப் பின் நமது மறைக்கல்வி வகுப்புகள் **01-07-2018** முதல் ஆரம்பமாகும். வழக்கம் போல் காலை **9:30** மணித் திருப்பலி முடிந்தவுடன் வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும். எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வகுப்புகளுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## உயர்மறைமாவட்ட குருக்களின் ஆண்டுத் தியானம்

**நாட்கள்: 2 ஜூலை முதல் 6 ஜூலை (திங்கள் முதல் வெள்ளி) வரை.**

இந்த **5** நாட்களும் நமது ஆலயத்தில் **மதியம் 12:30 மணி & மாலை 6:30 மணித்** திருப்பலிக்குப் பதிலாக நற்கருணை வழிபாடு மட்டும் நடைபெறும். இந்தத் தியானம் சிறக்க நமது உயர்மறைமாவட்ட குருக்கள் அனைவருக்காகவும் செபிக்க உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆண்டுப் பெருவிழா 2018

ஆண்டுதோறும் நமது தூய ஷர்த அன்னை ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறவுள்ளது. **08-07-2018, ஞாயிறு முதல்,** ஒன்பது வார நவநாளும், **09-09-2018, ஞாயிறு அன்று மாலை 6 மணிக்குப் பெருவிழாத் திருப்பலியும்,** அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவத் தேர்பவனியும் நடைபெறும்.

அனைவரும் வருக! வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆசீர் பெறுக!

**திருவிழா சிறக்கத் தாராள உள்ளத்தோடு நன்கொடை தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| லை | ற | ற் | ஆ | அ | க் | க | அ | ரு | ச |
| வு | பொ | ரு | த் | த | ன் | க | ள | தீ | தை |
| ச | கை | ன் | தி | ய | வா | தா | ம் | கா | உ |
| கி | வ | ப் | பை | ட | யோ | ன | பு | ட் | மீ |
| க் | ன் | ள் | க | தை | த | ன | தா | மி | ர் |
| கு | மை | கு | க் | சே | த் | ல | நி | தி | வா |
| த | யை | வே | த | கி | மா | ழூ | ம் | ய | ழ் |
| த் | க | த் | ப் | ர | ன | யா | ம | டி | வோ |
| ய | ரு | டு | ல் | யி | பை | ப் | ரு | க | ர் |
| வி | ரி | மோ | வ | கா | க | வ | ளி | ளை | ன் |

1. அக்குழந்தை ஆண்டவருடைய __________ப் பெற்றிருந்தது.
2. __________ இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார்.
3. இந்த __________ச் செய்தி நமக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது.
4. அவருடைய __________ அவிழ்க்கவும் எனக்குத் தகுதியில்லை.
5. குழந்தையாய் இருந்த __________ வளர்ந்து மனவலிமை பெற்றார்.
6. வெறுமையாகவும் பயனின்றியும் என் __________ச் செலவழித்தேன்.
7. எட்டாம் நாளில் அவர்கள் குழந்தைக்கு __________ செய்ய வந்தார்கள்.
8. கடவுள் __________ நீக்கிவிட்டுத் தாவீதை அவர்களுக்கு அரசராக ஏற்படுத்தினார்.
9. __________ முறையில் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கின்றேன்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | எசாயா 49 :1 – 6 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 139 : 1-3, 13-14, 15 |
| **பதிலுரை:** வியத்தகு முறையில் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கின்றேன். | |
| **இரண்டாம் வாசகம்:** | திருத்தூதர் பணிகள் 13 : 22 – 26 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! குழந்தாய், நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய். ஏனெனில், ஆண்டவருக்கான வழியை செம்மைப் படுத்த அவர் முன்னே செல்வாய். அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 1 : 57 – 66, 80 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.